

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் ஏற்பாட்டின் பேரில் அ.தி.மு.க .மாவட்ட அம்மா பேரவை செயலாளர்கூட்டுறவுசங்க தலைவர் அலவாக்கோட்டை கே ஆர். நாகராஜன் தலைமையில் 50க்கும் மேற்பட்ட அ.தி.மு.கவினர் மாவட்ட கழக செயலாளர், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் முன்னிலையில் கழகத்தில் இனைந்தார்கள். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட கழக துணைச் செயலாளர் த. சேங்கைமாறன், மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின், சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கில் , பெற்றோரை இழந்த அல்லது பெற்றோரில் ஒருவரை இழந்து வறுமையில் வாடும் குழந்தைகள் , தங்களது பள்ளிப்படிப்பினை இடைநிற்றல் இன்றி தொடரவும் , அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டும் மாதந்தோறும் ரூ.2,000/ பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் " அன்புக்கரங்கள் " திட்டத்தினை தொடங்கி வைத்தார் . அதனைத்தொடர்ந்து , விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் , மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஒ.சுகபுத்ரா , தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் , விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சினிவாசன் , சிலகாசி சட்டமன்ற உறுப்பினர் ஜி.அசோகன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் இத்திட்டத்தினை தொடங்கி வைத்து 173 குழந்தைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறுவதற்கான அடையாள அட்டைகளை வழங்கினார்கள் . இந்நிகழ்ச்சியின் நன்றியுரையை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மீனாட்சி வழங்கினார்.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 147வது பிறந்த தினத்தை முன்னிட்டு திருப்பாலையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் அலங்கரிக்கப்பட்ட அன்னாரின் திருவுருவ படத்திற்கு மாவட்ட செயலாளர் – வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கி சமூக நீதி நாள் உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தனச்செல்வம், கரு தியாகராஜன், வடிவேல்முருகன், ரோகிணி பொம்மதேவன், கணேசன், கலை கார்த்திகேயன், வீர கணேசன், மதிவாணன், பொதும்பு தனசேகர், பால ராஜேந்திரன், பால்பாண்டியன், சசிக்குமார், மருது பாண்டியன், கவுரிசங்கர், மதி வெங்கடேஷ், ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், கார்த்திக், மீரா ஜான், திருப்பாலை ராமமூர்த்தி, ஜே.கருப்பு, ஜே.மரியா உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருஉருவப்படத்திற்கு மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்றுக்கொண்டார். நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ. ராமஜெயம், மாவட்ட அவைத் தலைவர் அருணாச்சலம், மாநில தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.ஜே.பில்லா ஜெகன், மாவட்ட துணைச் செயலாளர் ஜெயக்குமார் ரூபன், ஒன்றிய செயலாளர்கள் இளையராஜா, ஏ.பி சதீஷ்குமார், கே.கே.ஆர்.ஜெயக்கொடி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி ஜனகர், வழக்கறிஞர் கிருபாகரன், வி.பி செல்வகுமார், உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், நாகலாபுரம் தனியார் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்து மருத்துவ பயனாளிகளுக்கு வழங்கப்படும் முகாமின் அட்டையை வழங்கினார். நிகழ்வில் கோவில்பட்டி மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர். வித்யா விஸ்வநாதன் தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர். சிவக்குமார், புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், ராமசுப்பு, இமானுவேல், பள்ளி தலைமையாசிரியர் ராஜாபழனிச்சாமி உட்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் சார்பில்

# தந்தை பெரியார் பிறந்த நாள்!

## திருவுருவப் படத்திற்கு செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை!

*செஞ்சி, செப். 18-*

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் தந்தை பெரியாரின் பிறந்த நாளை சமூக நீதி நாளாக கடைபிடிக்க வேண்டும் என அறிவுறுத்தி இருந்தார். அந்த வகையில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 147 ஆவது பிறந்தநாள் விழா நேற்று தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தந்தை பெரியாரின் பிறந்த நாள் விழா செஞ்சியில் கொண்டாடப்பட்டது.

செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார்அலி மஸ்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டசெயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு செஞ்சி அன்னை அஞ்சுகம் அம்மாள் பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தந்தை பெரியாரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி சமூக நீதி உறுதி மொழி ஏற்றனர்.

தொடர்ந்து பொதுமக்களுக்கு அவர் இனிப்புகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன்,செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன் , மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,நகர நிர்வாகிகள் நெடுஞ்செழியன், சங்கர், சுமித்ரா சங்கர், ஜே.எஸ்.சர்தார்,பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள்சீனிவாசன்,பொன்னம்பலம் , நூர்ஜகான்ஜாபர்,மகாலட்சுமி வெங்கடேசன்,நிர்வாகிகள் சிங்கம் சேகர்,பொறியாளர் அணி ரசூல் பாஷா,அரசு ஒப்பந்ததாரர்கள் கௌஸ் பாஷா, முருகேசன்,கறிவேப்பிலை ஏழுமலை,ராம்குமார்,சம்பத்,கோகுல், குத்தூஸ், தொ.மு.ச. நிர்வாகிகள் அரிகிருஷ்ணன்,தியாகராஜன், மாவட்ட பிரதநிதி அய்யாதுரை, தொண்டரணி பாஷா உள்ளிட்டோர் கலந்துகொண்டு தந்தை பெரியாரின் துருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றனர்.

---

திரு.வி.க.நகர் வடக்குப் பகுதிச் செயலாளர்

# செ.தமிழ்வேந்தன் தாயார் செ.முருகம்மாள் 16ஆம் நாள் நினைவேந்தல்!

## கழகத்தினர் அஞ்சலி!



*சென்னை, செப்.18 -*

சென்னை, வியாசர்பாடி எம்.எம்.கார்டன், எண். 81-ல் வசித்த கழக முன்னோடி நினைவில் வாழும் அ. செல்லப்பன் அவர்களின் மனைவியும், திரு. வி.க. நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ. தமிழ் வேந்தனின் தாயாருமான - திருமதி செ. முருகம்மாள் (வயது 84) அவர்களின் 16ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வு நேற்று (17.09.2025- புதன் கிழமை) மாலை 7 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், உறவினர்கள் நண்பர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# திமுக தகவல் தொழில்நுட்ப அணி, மாவட்ட, துணை, மற்றும் தொகுதி, நிர்வாகிகள் நியமனம்!

## தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

DMK IT WING

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட **திரு. ஆர் கௌதம்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு. கே. என் அருள் ஜோதி** அவர்கள் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) குமாரபாளையம் தொகுதி **திரு.R. வடிவேல்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) பரமத்திவேலூர் தொகுதி **திரு. S.தினேஷ் குமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) திருச்செங்கோடு தொகுதி **திரு.ஷேக் மீரான்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு.T.பரசுராமன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட **திருமதி. ஆர். தாரணி** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திருமதி. எம் கவிப்பிரியா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

### திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட **திரு.பி.ஆனந்த்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு.டி கார்த்திக்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு. மோகனவேல்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி.S.சுகன்யா** அவர்கள்நியமிக்கப்படுகிறார்

### குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட **திரு.பூபதிராஜு** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு.கி.கோகுல கண்ணன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு.S.கார்த்திக் ராஜ்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி.M.ஸ்ரீதேவி** அவர்கள்நியமிக்கப்படுகிறார்,

### பரமத்திவேலூர் சட்டமன்ற தொகுதி

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு.S.லோகேஸ்வரன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட **திரு. யுவராஜ்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு. எம்.சுரேஷ்குமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி. B.வசந்தி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

மாவட்ட ஒருங்கிணைப்பாளராக **திரு. மே.அருண்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக(களப்பணி) திருப்பூர் வடக்கு தொகுதி நியமிக்கப்பட்ட **திரு. ரவி சங்கர்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு ம. நவீன் குமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) அவிநாசி தொகுதி நியமிக்கப்பட்ட **திரு பார்த்திபன்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு. பா. சதீஷ் குமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு P.லோகநாதன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி எஸ். பரமேஸ்வரி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு நவீன் ராஜ்** (கூடுதலாக) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

### திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு.சந்திரோதயன்(எ) உதயா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு.ராஜீவ்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **செல்வி. கி பத்மாவதி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

### அவினாசி சட்டமன்ற தொகுதி

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு செ.சங்கர்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு. ரா கார்த்தி** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு.அந்தோணி தாசன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி** R. **கல்பனா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

### ஈரோடு மத்திய மாவட்டம்

ஈரோடு மத்திய மாவட்ட ஒருங்கிணைப்பாளராக **திரு.எம். யுவராஜன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) பெருந்துறை தொகுதி **திரு.செந்தில் குமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) பவானி தொகுதி **திரு M.ஜெகநாதன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு. து.குமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு. சுரேஷ் குமார்** (கூடுதலாக) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி.மா.புஷ்பலதா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

### பெருந்துறை சட்டமன்ற தொகுதி

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு. N. மகேந்திரன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு. கா.வசந்தகுமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி. கி.உமா மகேஸ்வரி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

### பவானி சட்டமன்ற தொகுதி

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு. R. பூபாலன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு. தென்னரசு** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி. நிவேதா** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திருமதி. உதயகுமாரி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

### தருமபுரி மேற்கு மாவட்டம்

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக(களப்பணி) பாலக்கோடு தொகுதி நியமிக்கப்பட்ட **திரு.** PMS **ஆனந்த்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு.** TMP **தமிழ்வாணன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

பாலக்கோடு சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு. D.இளவரசன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்,
தகவல் தொழில்நுட்ப அணி தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மீஞ்சூர் க. சுந்தரம்
## செப்டம்பர் 18 (2024)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈர்ப்பு கொண்டு பணியாற்றத் தொடங்கினார்.

மீஞ்சூர் ஒன்றியப் பிரதிநிதி, ஒன்றிய துணைச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட கழகப் பொறுப்புகளை வகித்ததோடு, கழகத் துணைப் பொதுச்செயலாளராகவும் – மாநில ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1989,1996 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அமைச்சரவையில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராகவும் – பால்வளத் துறை அமைச்சராகவும் இருந்தவர். கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

2023ஆம் ஆண்டு வேலூரில் நடைபெற்ற முப்பெரும் விழாவில்,"அண்ணா விருது" வழங்கிச் சிறப்பித்ததுடன், "கழகப் பணியிலும், மக்கள் பணியிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்ட இவரது மறைவு பேரிழப்பாகும்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**